கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கே.எஸ்.ச.இளையசூரியன் வரவேற்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன்- குத்தாலம் க.அன்பழகன் - துரை. தமிழ்ச்செல்வன்- சா.சஸ்ரீனா பிர்தவுஸ் சிறப்புரை!

புதுக்கோட்டை,ஜன.25-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2026-ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணியளவில் அண்ணா சிலை அருகில் டாக்சி மார்க்கெட் புதுக்கோட்டையில்புதுக் கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையசூரியன் வரவேற்புரையாற்றுகிறார் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் எம்.எம். அப்துல்லா, டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன்,

பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, அரு.வீரமணி, சுப.சரவணன், டாக்டர் எஸ். ஆர். அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எம். லியாகத் அலி,எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, கீரை.தமிழ் ராஜா சு.சண்முகம், வே. ராஜேஷ்,தவ.பாஞ்சாலன்,

டாக்டர் சி.குறிஞ்சிவாணன், பூங்குடி எம்.சிவக்குமார், தொகுதி பொறுப்பாளர்கள் கார்த்திகேயன் வேல்சாமி,துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, வழக்கறிஞர் ஆர்.மணவழகன் மாநகர கழக நிர்வாகிகள் :அ. ரெத்தினம், ப.ரெங்கராஜன்,

மா.மணிவேலன். முத்தழகு பழனிவேலு, சேட்டு (எ) ஷாஜகான், ஏ.இராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க.அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் செ.பிரசன்னா, சிப்காட் சதீஸ்குமார், ஆர்.கே.ரெத்தினசபாபதி, கோ.அண்ணாத்துரை, மாநகர அமைப்பாளர்கள் எம்.எஸ்.அஜ்மீர் ராஜா, கே.பிரகாஷ் ராஜ் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளுக்கு சிறப்பு செய்கின்றனர்.

கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன்,

தலைமை கழக பேச்சாளர்கள் துரை. தமிழ்ச்செல்வன், சா.சஸ் ரீனா பிர்தவுஸ், சொ.தமிழினியன், மொழிப்போர் தியாகி பார்த்தசாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். ஒன்றிய கழக செயலாளர்கள் கே. எஸ்.சந்திரன் மு.க.இராமகிருஷ்ணன், ஆர்.சாமிநாதன், என்.சேட்டு, எம்.பரமசிவம். மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து வெ.முத்துக்கிருஷ்ணன். தென்னலூர் எம்.பழனியப்பன், மா.தமிழ்அய்யா, ஓ.எஸ். வெங்கடாசலம், அ.இளங்குமரன், சி.சண்முகம் கே.பி. அய்யப்பன், எம்.கோவிந்தராஜன்,

பொதுக்குழு உறுப்பினர்கள்: என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, எம். செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர்கள் வை.விஜயக்குமார், உ.முருகேசன், பி. அண்ணாத்துரை, எம். எஸ்.ஏ.முகமது ரிஷா, கழக முன்னோடிகள் மு.பி.மணி. வை.கோ.ராஜன், மு.கலியமூர்த்தி, திருஞானசம்பந்தம், க.நைனா முகம்மது, எம். எம்.பாலு,

ஆர்.பாலகிருஷ்ணன், இராம.செல்வராஜ், ராய. முத்துக்குமார், முன்னாள்

ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள் பேருராட்சி தலைவர்கள் ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன் பாண்டிச் செல்வி கே.ஆர்.என்.போஸ், காமு மு.பி.மணி, பி.சின்னையா, மாலா ராஜேந்திர துரை, லதா இளங்குமரன், கல்யாணி மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம், ராஜேஸ்வரி செந்தில்குமார், சாந்தி தங்கசிங்கம், கை.பழனிச்சாமி, ஜெயமீரா ரவிக்குமார், சகுந்தலா வைரவன், எம்.ஏ.எம்.இம்தியாஸ், இ.செந்தில்ராஜா, எம். நைனா முகம்மது, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்

உரக்கடை எம்.கருப்பையா, மஜீத் முபாரக், டி.சூசைராஜ், கே.கணபதி, புத்தாம்பூர் எம்.சுப்பையா, டாக்டர் மு.க.முத்துக் கருப்பன், அ.பிரபா, செந்தாமரை பாலு, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, பொன்.பாரி வள்ளல், வி.என்.எம்.பாலு, சி.அரங்கநாயகம், வி.ஜி. ஆர்.மணிவண்ணன், க.கவிவேந்தன், தவசுமணி, எஸ். வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், ஆர்.டி.ஆர்.ராமசாமி, கா. இளவரசன், என்.வீரைய்யா, எம்.ராஜா, எம்.வேலுச்சாமி, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி எம்.சிவா, முகம்மது அன்சாரி பாஷித் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் , கழக முன்னோடிகள் செயல் வீரர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பி.தெய்வானை நன்றி கூறுகிறார்.

அமைச்சர் கே.என். நேரு தலைமையில்

# திருச்சியில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் அறிக்கை!





திருச்சி, ஜன.25-

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

அன்னை தமிழ் மொழி காக்க உயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திடும் வகையில் இன்று (25.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை சுமார் 4.00 மணியளவில் வீரவணக்க நாள் ஊர்வலம் திருச்சி தில்லைநகர் கோகினூர் தியேட்டர் அருகிலிருந்து கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களின் தலைமையிலும், பள்ளி கல்வித்துறை அமைச்சரும், தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மத்திய மாவட்ட செயலாளர் க. வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் ந. தியாகராஜன் எம்.எல்.ஏ.,மாநகர செயலாளர் மேயர் மு.அன்பழகன் ஆகியோர் முன்னிலையிலும் மௌன அஞ்சலி ஊர்வலம் புறப்பட்டு தென்னூர் உய்யக்கொண்டான் கரையில் அமைந்துள்ள மொழிப்போர் தியாகிகள் கல்லறைக்கு சென்றடைந்து அங்கு மொழி போர் தியாகிகளுக்கு மலர் அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் செலுத்தப்படும். அதனை தொடர்ந்து திருச்சி மாநகரில் தென்னூர் உழவர் சந்தை அருகில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற விருக்கிறது இக்கூட்டத்தில் முதன்மை செயலாளர் கே.என்.நேரு, தலைமை கழக பேச்சாளர் வி.பி. கலைராஜன், பி.எம்.ஆனந்த், அ. அருண்குமார் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர் அதனை தொடர்ந்து வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முசிறியில் மருது அழகுராஜ், சேலம் கோவிந்தன், சேக்அலிமாஸ்அலி ஆகியோர் கலந்துகொள்ளும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டமும் நடைபெற விருக்கின்றது.

இந்த வீரவணக்க நாள் ஊர் வலம் மற்றும் பொதுக் கூட்டத்திற்கு மாவட்ட, மாநகர அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மறைந்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் அறிக்கை!

திருச்சி, ஜன.25-

திருச்சி தெற்கு மாவட்ட கழக தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நினைவு நாள் பொதுக்கூட்டம் திருச்சி திருவெறும்பூர் தொகுதி மாநகரம் அரியமங்கலம் பகுதியில் பால் பண்ணை சர்வீஸ் ரோட்டில் இன்று (25.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6:00 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட தலைமை மற்றும் சிறப்புரை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைக் கழக பேச்சாளர்கள் செந்தலை ந.கவுதமன், சிறுவானூர் பரசுராமன், ஜெ.பாலகணபதி கலந்து கொண்டு வீரவணக்க நாள் பேருரையாற்றுகிறார்கள். பொதுக் கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட ,வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொது மக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடலூர் மேற்கு மாவட்டம்- – நெய்வேலியில்

# “தீ பரவட்டும்” மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர்- அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!



கடலூர், ஜன. 25-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைங்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் “தீ பரவட்டும்” மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் இன்று (25.01.2026) மாலை 6 மணியளவில் நெய்வேலி தொ. மு.ச.வட்டம் 25 ல் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டதில் தலைமை கழக பேச்சாளர்கள் திவ்யா சத்யராஜ் (மாநில துணை செயலாளர் தகவல் தொழில் நுட்ப அணி) , ஆம்பூர் தருமன், க. முல்லைவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டு வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகின்றனர்.

அதுசமயம் இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற , சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை, செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகரகழக, பேரூர் கழக , செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு. ச. நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# அறந்தாங்கியில் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## பொன்.முத்துராமலிங்கம் – அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை,ஜன.25-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி நகர திமுக மற்றும் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (25.01.2026-ஞாயிற்றுக்கிழமை) வ.உ.சி திடல், அறந்தாங்கியில் மாலை 5 மணியளவில் அறந்தாங்கி நகர கழக செயலாளர்

க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் வரவேற்புரையாற்றுகிறார் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம், இரா.ஆனந்த், சக்தி ராமசாமி பொன்.கணேசன் வே.பொன்துரை, எஸ்.எம்.சீனியார், தி.முத்து, ராஜபெரியண்ணன், ஆர்.எம்.கே.கார்த்திக் குமார், ராஜ மாணிக்கம்,

ஆர்.ஜெய கிருஷ்ணராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். முன்னாள் அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்

பொன்.முத்துராம லிங்கம், இயற்கை வளங்கள் துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர். கழக இளம் பேச்சாளர்சு. சுகநிலவன், அறந்தாங்கி தொகுதி பொறுப்பாளர் சுப.த.திவாகரன், அறந்தாங்கி இரா.இராஜன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர்.ரகு. அண்ணாமலை, ஆர்.ஆர்.கே.கலைமணி,அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன். ஸ்ரீதேவி அண்ணாதுரை,

க.அடைக்கலம், ஜெ.அபுதாஹிர், பொன்.ராமலிங்கம், அழகு (எ) சிதம்பரம், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ.முத்துகுமார் (எ) துரைக்கண்ணு, வி. ஆர்.இளையராஜா, கே.எஸ். ரவி, அ.அடைக்கலமணி, இரா. கணேசன், த.மணிராஜன், என். வீரையா, கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், ஆ.சண்முக நாதன் அ.செந்தில்குமார், அ.அழகப்பன், பழ.மாரியப்பன், சு.சத்திய சீலன், கோ.சக்தி வேல்,ஹரி. விமலாதி, ரம்யா. பாலு, அப்துல் ஹமீது, பாத்திமா பீவி, கே.ஆர். ராமசாமி, ரா.மேகநாதன், ஆர். சிவக்குமார், என்.கே.எஸ்.சாகுல் ஹமிது, சிவபால.இளங்கோ

டாக்டர் சுதர்சன், வளர்மதி, மு.ராமலிங்கம், மு.குமரேசன், மா.நடேசன், மணிகண்டன், தேவி. மு.கருணாகரன், நா.நசுருதீன் எம்.ஜி (எ)ராமச்சந்திரன், இரா.தமிழ்ராசு, க.கவிக்குமார், அ.முகமது ரபீக், பி.எல். இளையராஜா, சே.அருணகுமார். ஆ. பழனிச்சாமி, கே.வி.ராமசாமி, த.அனந்தராமன், அனுராதா ராஜேந்திரன், ராவுத்தர் கனி. கே.கார்த்திகேயன், எஸ்.அருளாந்து, வி.ஆர்.செந்தில்வேலன், ஆ.செல்லத்துரை, வின்சென்ட் ராஜேந்திரன், வி.சி.செல்வம், பா.காந்திநாதன், ஆர்.சரோஜா தேவி, ம.அன்பழகன், எஸ்.பாஸ்கரன், ப.வரதராஜன், சோம.ஆறுமுகம், வை.காமராஜ், பிர. சுப்பையா, கே.சித்திரவேல், ராமலிங்கம், மைவயல் கணபதி, பந்தா ராஜேந்திரன், சி.காசிநாதன், முருகநாராய ணன், கோ. துளசிராமன், சுமதி சங்கர், கருணா, க.மதி, க.கைலாசம், கா.செந்தில்குமார், கி.தமிழ் மறைச்செல்வன் வி. ரமேஷ், சுமங்கலி ஷாஜகான், சு.காளிதாஸ், மாரியப்பன், ஜேசுதாஸ், ரவி, பிச்சைமுகமது, இரா. அடைக்கலராஜா, என்.பழனிராஜன், அஜ்மீர்அலி, நாகூர்கனி, பி.சேக்முகமது, கூத்தப்பெருமாள், பி.எல்.பி.வடிவேல், சு.செந்தில்குமார். ஜான்பிரிட்டோ மற்றும்புதுக்கோட்டை தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், மாணவரணி அமைப்பாளர் & துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கை.உதயசூரியா, நகர மாணவர் அணி அமைப்பாளர் ஆர். அசோக்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பெ. பழனியப்பன் சிறப்புரை!






தருமபுரி, ஜன.25-

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் 23.01.2026 வெள்ளிக் கிழமை காலை 10.30 மணியளவில் காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.மனோகரன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அவர்கள் 20.01.2026 அன்று கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகள் குறித்தும், 2026 சட்டமன்றத் தேர்தல் ஆக்கப்பணிகள் குறித்தும், SIR பணிகள் குறித்தும் கழக நிர்வாகிகளிடம் ஆலோசனைகளை வழங்கினார்.


அதனை தொடர்ந்து பாப்பிரெட்டிப்பட்டி மத்திய ஒன்றிய கழக அவைத்தலைவர், முன்னாள் பால்வளத் துணை தலைவர், கழக மூத்த முன்னோடி ஆசிரியர். மு.வேலு அவர்கள் மறைவையொட்டி தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

“வெல்லும் தமிழ்ப்பெண்கள்” வாக்குச்சாவடிக்கு தலா 10 பெண் கழக நிர்வாகிகள் பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை வீடு வீடாக பரப்புரை மேற்கொள்வது குறித்தும், “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரை பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை தொகுதிக்கு 4 இடங்களில் பரப்புரை மேற்கொள்வது குறித்தும், “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சி மாநாடு வருகின்ற பிப்ரவரி 14 தேதி வடக்கு மண்டலம் திருப்பத்தூரில் நடைபெறுவதை குறித்தும், ஜனவரி 25க்குள் புதுப்பிக்கப்பட்ட BLA2,BDA,BLC நிர்வாகிகளை மாவட்ட கழக அலுவலகத்தில் வழங்குவது குறித்தும், “ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்” என்ற இலட்சித்தோடு பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனைவரும் ஒற்றுமையாக தேர்தல் பணிகளை சிறப்பாக செய்து கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் கழக திராவிட மாடல் ஆட்சி அமைய பாடுபடுவோம் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வருகின்ற மார்ச் 8 அன்று நடைபெற விருக்கும் கழக மாநில மாநாட்டில் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுசமயம், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீழப்பழுவூர் சின்னச்சாமி
### சனவரி 25 (1964)



இந்தித் திணிப்பை எதிர்த்து தனது 27வது வயதில் தமிழ்மொழி காக்க – திருச்சி மாவட்டம், கீழப்பழுவூர் என்கிற சிற்றூர் கழகத் தோழர் திருச்சி ரயில் நிலையத்தின் வாசலில் விடியற்காலை 4.30 மணிக்கு தன் தலையில் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு நெருப்பில் பற்றவைத்து, கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலைகளுக்கு இடையே ‘தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!’ என முழக்கமிட்டபடி தியாகத் தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட தீரன்.

“இந்தி எதிர்ப்புப் போரில் முதன்முதலாகத் தீக்குளித்தவர் என் கணவர்தான். அந்தப் பெருமை ஒன்றுதான் அவர் எனக்கு விட்டுப்போன சொத்து” என அவரது துணைவியார் தெரிவித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.